# ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

## திருக்கோயில் மற்றும் உபகோயில்களில் காவல் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

(இரண்டு உறை முறையில்)

ந.க. எண் 3313 / 1427 / சி 1 / நாள் 01.10.2018

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் அதன் உபகோயில்களில் 01.01.2019 முதல் 30.12.2020 வரை ஒப்பந்த அடிப்படையில் 40 பணியாளர்களை கொண்டு பாதுகாப்பு பணி மேற்கொள்ள முன் அனுபவம் உள்ள I.S.O தரச்சான்று பெற்ற தனியார் நிறுவனங்களிடமிருந்து இரண்டு உறை முறையில் ஒப்பந்த புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தபுள்ளி திறப்பு நடைபெறம் இடம் – ஸ்ரீ ரெங்கவிலாச மண்டபம், ஸ்ரீரங்கம் திருக்கோயில்

நாள் நேரம் – 24.10.2018 மாலை 4.00 மணி

| | | |
|---|---|---|
| 1 | பாதுகாவலர்கள் பணிபுரிய வேண்டிய இடங்கள் | திருக்கோயில் வளாகம் மற்றும் உபகோயில்கள். |
| 2 | பணிபுரிய வேண்டிய பணியாளர்கள் எண்ணிக்கை | 40 |
| 3 | ஒப்பந்த காலம் | 01.01.2019 முதல் 31.12.2020 வரை |
| 4 | ஒப்பந்தபுள்ளி படிவம் விலை | ரூ.500/– (திரும்ப பெற தக்கதல்ல) |
| 5 | ஒப்பந்தபுள்ளி படிவம் வழங்கும் நாள் மற்றும் நேரம் | 10.10.2018 முதல் 22.10.2018 மாலை 5.00 மணி வரை (அலுவலக நேரங்களில் மட்டும்) |
| 6 | ஒப்பந்தபுள்ளி படிவம் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் | 24.10.2018 மாலை 3.00 மணிக்குள் (அலுவலக நேரங்களில் மட்டும்) |
| 7 | ஒப்பந்தபுள்ளி படிவம் திறக்கும் நேரம் | 24.10.2018 மாலை 4.00 மணிக்கு மேல் |
| 8 | ஒப்பந்தபுள்ளி வைப்புத் தொகை | ரூ.1,00,000/– (ஒரு இலட்சம் மட்டும்) (தகுதிகாண் படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்) |

## <u>நிபந்தனைகள்</u>

1. திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் மற்றும் உபகோயில்களில் காவல் பணியினை 40 காவலர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் செய்து கொடுக்க தமிழக அரசால் தமிழ்நாடு தனியார் பாதுகாப்புச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட தனியார் பாதுகாப்பு நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

2. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை திருக்கோயில் அலுவலகத்தில் ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

3. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ரூ.1.00,000/- (ரூபாய் ஒரு இலட்சம்) டெபாசிட் தொகையினை வங்கியில் மாற்றத்தக்க வகையில் 'இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்' என்ற பெயரில் வங்கி வரைவோலை / வங்கி காசோலை எடுத்து, முதல் உறை – டெண்டருடன் இணைத்துக் கொடுக்க வேண்டும். டெபாசிட் தொகை ரொக்கமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. ஒப்பந்தப்புள்ளி படிவத்தில், ஒப்பந்தப்புள்ளி தொகையை எண்ணாலும், எழுத்தாலும் அடித்தல் திருத்தல் இன்றி தெளிவாக குறிப்பிட்டு கையொப்பம் இட்டு அதற்குரிய ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் உரிய நேரத்தில் செலுத்த வேண்டும். காலம் கடந்து வரப்பெறும் ஒப்பந்தபுள்ளி ஏற்கப்பட மாட்டாது.

5. இந்து மதத்தை சார்ந்தவர்களிடமிருந்து மட்டுமே டெண்டர்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்ததாரரால் நியமிக்கப்படும் பணியாளர்களும் இந்து மதத்தைத் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

6. திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்த வேண்டியவர்கள், வழக்கு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் திருக்கோயில் நலனுக்கு எதிராக செயல்பட்டவர்கள், குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

7. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் நிலையான முகவரி சான்று கொடுத்து ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக் கொள்ள வேண்டும்.

8. இத்திருக்கோயிலுக்கு பாக்கி செலுத்த வேண்டியவர்களின் உறவினர்களோ, ஏற்கெனவே இத்திருக்கோயிலில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி எடுத்து நிபந்தனைகளின்படி நடக்க தவறியவர்களோ இந்த ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

9. முதல் உறையில் வரைவோலையுடன் ஒப்பந்தக்காரரது தகுதி விவரங்களை வைத்து மூடி முத்திரையிட்டும் (Technical bid) இரண்டாவது உறையில் விலை விகிதம் குறிப்பிட்டும் மூடி முத்திரையிட்டும் (Financial bid) இந்த இரண்டு உறைகளையும் வைத்து மூடி முத்திரையிட வேண்டும். ஒவ்வொரு உறையின் மீதும் தகுதிகாண் படிவம் மற்றும் விலை விகித படிவம் என தனித்தனியாக எழுதப்பட்டு மூன்றாவது உறையில் வைக்க வேண்டும்.

10. இரு உறைகள் முறையில் நடத்தப்படும் ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி திறப்பன்று முதலில் தகுதிகாண் படிவம் உள்ள உறை (Technical bid) முதலில் திறக்கப்படும். அதனைத் தொடர்ந்து அதில் (Technical bid) தகுதியுடைய ஒப்பந்தக்காரரின் விலை விகித படிவங்கள் மட்டுமே (Financial bid) திறக்கப்படும்.

11. மாவட்ட ஆட்சியரின் காவலருக்கான ( Watchman) குறைந்தபட்ச ஊதியவிகிதப்படி ஊதியம் குறிப்பிடப்பட வேண்டும்.

12. ஊதியத்தில் இ.பி.எப், இ.எஸ்.ஐ சேர்த்து சேவைக்கட்டணத்தின் சதவீதம் கணக்கிட்டு ஒப்பந்தபுள்ளியில் குறிப்பிடப்பட வேண்டும்.

13. ஒப்பந்தபுள்ளி படிவத்தில் (Financial bid) சேவைக்கட்டணம் கலத்தில் 5 சதவீதம் மற்றும் 5 சதவீதத்திற்கு கீழ் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களின் ஒப்பந்தபுள்ளி நிராகரிக்கப்படும். (Service charges 5% and less will be out rightly rejected)

14. குறைவான சதவீதம் சேவை கட்டணமாக குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் L1 என முடிவு செய்யப்பட்டு, விலைக்குறைப்பு பெறப்பட்ட பின்னர் ஒப்பந்தபுள்ளி முடிவு செய்யப்படும்.

15. ஒப்பந்தப்புள்ளிக் கொடுக்கும் நிறுவனம் **ஒரு நபருக்கு ஒரு ஷிப்ட்க்கான தொகையை** குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும். ஒரு வருடத்திற்கான ஒப்பந்தப்புள்ளி தொகையில் 3% தொகையை முன் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும்.

16. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை விண்ணப்பதாரர் முழு கையொப்பம் மற்றும் தேதியுடன் அடித்தல், திருத்தலின்றி முழுமையாக பூர்த்தி செய்து ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் உரிய நேரத்திற்குள்ளாக சேர்ப்பிக்க வேண்டும்.

17. ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள், ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் எந்தவிதமான நிபந்தனைகளோ அல்லது கோரிக்கைகளோ தெரிவிக்கக் கூடாது. மீறினால் அவைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

18. பாதுகாப்பு நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாக நாள் ஒன்றுக்கு குறைந்தது 100 நபர்களை கொண்டு தமிழக திருக்கோயில்களில் அல்லது அரசுத்துறை, அரசு சார்ந்த நிறுவனங்களில் பணியமர்த்தியதற்கான உத்தரவு மற்றும் ஒப்பந்தபத்திர நகல் இணைக்கப்பட வேண்டும்.

19. ஒப்பந்தப்புள்ளி கவரில் தங்களது (அனுப்புநர்) விலாசத்தை முழுமையாக (செல் நம்பருடன்) குறிப்பிட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி திறப்பின்போது வந்திருக்கும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி பெட்டி திறக்கப்படும், பெயர் அழைக்கப்படும். அப்போது, ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் தனது டெண்டர் டெபாசிட்டுக்கான திருக்கோயிலின் ரசீதின் அசலை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பிறகே பதிவு செய்து, ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

அவ்வாறு டெபாசிட்டுக்கான திருக்கோயிலின் ரசீதின் நகலை சமர்ப்பிக்க தவறுபவர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

20. ஒப்பந்தத்திற்கான விண்ணப்பதாரர் ஒரு நிறுவனமாகவோ (Proprietorship) பிரைவேட் லிமிடெட், அல்லது பப்ளிக் லிமிடெட் ஆகவோ அல்லது கூட்டு நிறுவனமாகவோ (Firm) இருக்க வேண்டும். வருடம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூபாய் இரண்டு கோடிக்கு குறைவில்லாமல் வரவு – செலவு செய்ததற்கு பட்டய கணக்கரிடம் இருந்து சான்று கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு இணைக்கப்பட வேண்டும். வருமானவரி தாக்கல் செய்ததற்கான ஆவணங்களும் சமர்பிக்க வேண்டும். ISO 9001 – தரச்சான்று பெற்றிருப்பின் அதன் நகல் இணைக்கப்பட வேண்டும்.

21. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் அரசு அங்கீகாரம் அல்லது தமிழக அரசால் தமிழ்நாடு தனியார் பாதுகாப்பு சட்டப்படி Private Security Agencies (Regulation) Act 2005 (மற்றும் The Tamil Nadu Private Security Agencies Rules 2008) பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். பதிவு செய்ததற்கான சான்று இணைக்கப்பட வேண்டும். முன் அனுபவச் சான்று இணைக்கப்பட வேண்டும்.

22. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தர கணக்கு எண். அட்டை (PAN CARD) நகல் இணைக்கப்பட வேண்டும்.

23. EPF, ESI மற்றும் GST வரி செலுத்துவதற்கான பதிவு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். நகல் இணைக்கப்பட வேண்டும்.

24. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் தன்மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவோ இல்லை என்பதற்கான பிரமாணப்பத்திரம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் நிறுவனம் நாளது தேதி வரை குற்ற நடவடிக்கை எதிலும் ஈடுபடவில்லை என்பதற்கான காவல்துறை சான்று பெற்றிருக்க வேண்டும்.

25. எந்தவொரு காரணம் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ / நிராகரிக்கவோ அல்லது ஒப்பந்தப்புள்ளி நிறுத்தி வைக்கவோ, இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதை ஆட்சேபிக்கும் உரிமை ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவருக்கு கிடையாது.

26. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வேறு பெயர்களுக்கு மாற்றத்தக்கதல்ல.

27. விண்ணப்பதாரரால் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் பொய்யானவை என தெரிய வருமானால் ஒப்பந்தப்புள்ளி முன்வைப்புத் தொகை முழுவதும் பறிமுதல் செய்யப்படும்.

28. ஒப்பந்தம் உறுதி செய்யப்படும் நிறுவனத்தினரால் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்படும் நபர்கள் 30 வயது நிரம்பியவர்களாகவும், 50 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், 170 செ.மீ உயரத்திற்கு குறையாதவர்களாகவும் மார்பளவு 80 செ.மீ – 84 செ. மீக்கு குறையாமல் இருக்க வேண்டும். திடகாத்ரமான உடல், ஆரோக்யம் உடையவராக இருத்தல் வேண்டும்.

29. ஒப்பந்ததாரரால் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்படும் பணியாளர்கள் குறைந்தபட்சம் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

30. ஒப்பந்ததாரரால் பாதுகாப்பு பணிக்கு அமர்த்தப்படும் பணியாளர்கள் தங்கள் வசிக்கும் இருப்பிட எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்திலிருந்து நன்னடத்தை சான்று பெற்று அதன் நகலினை இவ்வலுவலகத்தில் வழங்கப்பட வேண்டும்.

31. திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களிடம் கனிவுடன் நடந்து கொள்ள வேண்டும்.

32. ஏற்கெனவே பணிபார்த்த நிறுவனங்களின் விபரங்கள் அதிகமாக இருப்பின் தனி இணைப்பாக கொடுக்கவும்.

33. வேலைக்கு அமர்த்தப்படும் நபர்கள் திருக்கோயில் பழக்கவழக்கங்களுக்கு கட்டுப்பட்டு வேலை செய்வோம் என்று உறுதிப்பத்திரம் மூலம் உறுதி அளித்திட வேண்டும். வேலை நேரத்தில், பீடி, சிகரெட், பான்பராக் போன்ற லாகிரி வஸ்துக்களை உபயோகப்படுத்தகூடாது.

34. ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் ஒரே ஒப்பந்த தொகையினை குறிப்பிட்டிருந்தால் திருக்கோயில் நிர்வாகம் எடுக்கும் முடிவே இறுதியானது.

35. ஒப்பந்தப்புள்ளி இந்து சமய அறநிலையச் சட்ட விதிகளுக்கும் ஆணையர் அவர்களின் அங்கீகாரத்திற்கும் உட்பட்டது.

36. ஒப்பந்தக்காரர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி ஆணையரால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் திருக்கோயில் நிர்வாகத்தால் பிறப்பிக்கப்படும் உத்தரவு நாளிலிருந்து 7 தினங்களுக்குள் தனது சொந்த செலவில் ரூ.100/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை ஏற்று ஒப்பந்தப்பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.

37. ஒப்பந்தக்காரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்பு வழங்கப்படும் ஒவ்வொரு பட்டியலிலும் 3% பிடித்த தொகையாக பிடித்தம் செய்து கொள்ளப்படும். இத்தொகையினை ஒப்பந்தக்காலம் முடிவுற்றதும், அவ்வாண்டுக்கான பசலி தணிக்கை அறிக்கை கிடைக்கப் பெற்றதும், ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வட்டியின்றி வழங்கப்படும்.

38. ஒப்பந்தக்காரர்களால் நியமிக்கப்படும் பாதுகாவலர்கள், பணி இடத்தில், திருக்கோயில் நிர்வாகம் வழங்கும் உத்தரவு, கட்டுப்பாட்டின் படி பணி செய்ய வேண்டும்.

39. பாதுகாவலர்களின் பணி குறித்து புகாருக்கு இடமின்றி உரிய திருக்கோயில் கண்காணிப்பு அலுவலர்கள் சான்று அளிக்கப்பட்டால் தான் ஒவ்வொரு மாதமும் பணி செய்வதற்கான தொகை வழங்கப்படும்.

40. பாதுகாப்பு பணியில் பணிபுரியும் பாதுகாவலர்களின் எண்ணிக்கையை கூட்டவோ, குறைக்கவோ நிர்வாகத்திற்கு அதிகாரம் உண்டு. குறைந்தால் ஒப்பந்த தொகையில் குறைக்கப்பட்ட காவலர்களுக்குத் தக்கவாறு ஊதியம் குறைத்து வழங்கப்படும், அதிகப்படுத்தினால் அதிகப்படுத்தப்பட்ட காவலர்களுக்குத் தக்கவாறு தொகை கூடுதலாக வழங்கப்படும்.

41. நிபந்தனைகளை மீறினாலோ, பின்பற்ற தவறினாலோ அல்லது பணியினை சரிவர செய்யாவிட்டாலோ, ஒப்பந்தக்காரருக்கு எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தத்தை ரத்து செய்திட திருக்கோயில் நிர்வாகத்திற்கு அதிகாரமுண்டு. ஒப்பந்தத்தாரர் நிபந்தனைப்படி நடக்கவில்லை எனக் கருதினால், மீறிய ஷரத்துக்கு தகுந்தவாறு அபராதம் விதிக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமையுண்டு.

42. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் மீறப்பட்டால் பாதுகாப்பு பணிக்கான ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். காப்புத் தொகையாக செலுத்திய தொகை பறிமுதல் செய்யப்படும். மறு ஒப்பந்தப்புள்ளி மூலம் லாபம் ஏற்பட்டால் முன் ஒப்பந்தக்காரருக்கு எவ்வித பாத்தியமும் கிடையாது. இழப்பு ஏற்பட்டால் அதற்காக வழக்குத் தொடர நேரிட்டாலும் வழக்கு செலவுகளையும் வேறு இழப்புகள் இருந்தால் அவைகளையும் முன் ஒப்பந்தக்காரரிடம் வசூல் செய்யப்படும்.

43. பாதுகாப்பு பணியில் உள்ள பணியாளர்களுக்கு சிறிய பாதுகாப்பு கருவிகள் ஒப்பந்தகாரர் தனது சொந்தப் பொறுப்பில் ஏற்பாடு செய்து வழங்க வேண்டும். அதற்கென தனியாக தொகை ஏதும் திருக்கோயிலிலிருந்து வழங்கப்படமாட்டாது. காவல் பணிக்கு வருகிற காவலர்கள் பணிக்கு வரும் பொழுதுதும், பணி முடிந்து செல்லும் போதும் திருக்கோயிலில் பொறுத்தப்பட்டுள்ள பயோமெட்ரிக் இயந்திரத்தில் கைரேகை பதிவு செய்ய வேண்டும்.

44. பாதுகாப்பு பணிக்கு வருபவர்களுக்கு ஒப்பந்தக்காரர் சொந்தப் பொறுப்பில் தங்குமிடம் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்.

45. வருமானவரி விதிகளின்படியும், நடைமுறை விதிகளுக்குட்பட்டு பட்டுவாடா செய்யப்படும் தொகையிலிருந்து திருக்கோயில் நிர்வாகத்தால் பிடித்தம் செய்து செலுத்தப்படும்.

46. பாதுகாப்பு காவலர், தீயணைப்பு கருவி (Fire Extinguisher) இயக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

47. பணிக்கு வரும் பொழுது முடி சீராக வெட்டியும், முகச் சவரம் செய்தும் வர வேண்டும்.

48. திருக்கோயில் சொத்துக்கள் காணாமல் போனாலோ, திருடப்பட்டாலோ, ஒப்பந்த நிறுவனம் விசாரணை செய்து உதவிட வேண்டும். காவல்துறைக்கு புகார் அளித்து இழந்த பொருட்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதுகாவலரின் கவனக்குறைவால் இழப்புகள் ஏற்படுமாயின் ஒப்பந்த நிறுவனம் பொறுப்பு ஆகும். காணாமல் போன பொருட்களின் மதிப்பு ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்படும் தொகையிலிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

49. திருக்கோயில் பாதுகாப்பு பணியில் இருக்கும் பணியாளர்களுக்கும், திருக்கோயில் நிர்வாகத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அனைத்து மத்திய, மாநில சட்டம் மற்றும் விதிகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் ஒப்பந்த நிறுவனமே காவல் பணியாளர்களுக்கு பொறுப்பாகும்.

50. மாதாந்திர வருகைப் பதிவேடு ஒப்புகை அளிக்கப்படும் போது பாதுகாப்பு பணியில் குறைபாடுகளை கருத்தில் கொண்டு அதற்கு ஏற்ற வகையில் தண்டம் (அபராதம்) விதிக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு அதிகாரமுண்டு.

51. பாதுகாப்பு பணிக்கு தேவையான மின்னனு உபகரணங்கள் (Electronics Equipments) மெட்டல் டிடெக்டர் போன்றவைகளை இயக்குவதற்கு தெரிந்த நபர்கள் குறைந்த பட்சம் ஐந்து நபர்கள் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும். இவர்கள் நிலவுக்கால் வடிவ வெடிகுண்டு அறியும் கருவி (Door frame Metal & Metal Detector) இயக்கவும் கண்காணிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

52. நடப்பு ஒப்பந்தக் காலத்தில் முதல் மாதம் நீங்கலாக அடுத்து வரும் மாதங்களில் பட்டியலுடன் முந்தைய மாத வேலையாட்களின் கணக்கில் தொழிலாளர் சேமநல நதி (EPF) மற்றும் தொழிலாளர் மருத்துவ காப்பீட்டு (ESI) சந்தா மற்றும் (GST) தொகை செலுத்திய இரசீது மற்றும் வரி செலுத்தியதற்கான ரசீதுகள் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு வரப்பெறாத பட்டியல்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

53. பாதுகாப்பு நிறுவனத்தின் பணி திருப்திகரமாக இல்லையெனில், ஒப்பந்தத்தை இரத்து செய்ய இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு பூரண அதிகாரம் உண்டு. பாதுகாப்புப் பணியில் கவனக்குறைவாக இருக்கும் காவலர்கள் மற்றும் காவலர்களின் நடத்தையில் நிர்வாகத்தால் குறை கண்டறியும் பட்சத்தில் அவர்களை இத்திருக்கோயில் பாதுகாப்புப் பணியிலிருந்து பாதுகாப்பு நிறுவனம் நீக்கிவிட வேண்டும். பணிக்குறைபாடுகள் கண்டறியப்பட்டால் அதற்கு அபராதம் விதிக்க இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு பூரண அதிகாரம் உண்டு.

54. பாதுகாவல் பணிபுரியும் அனைத்து ஒப்பந்த பணியாளர்களுக்கும் ஒரே வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்கி இ.சி.எஸ். மூலம் சம்பளத்தொகை பட்டுவாடா செய்யப்பட்ட விபரம் பிரதிமாத பட்டியலுடன் வழங்கப்பட வேண்டும்.

55. பாதுகாப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் காவலர்கள் ஒரே மாதிரியான திருக்கோயில் நிர்வாகம் நிர்ணயிக்கும், நிறத்தில் சீருடை அணிந்து பணிபுரிய வேண்டும். சலவைப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.

56. திருக்கோயில் நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை பெயர் அடையாளம் (Name Badge) அணிந்திருக்க வேண்டும். சீருடை, அடையாள அட்டை இல்லாத பாதுகாப்பு பணியாளருக்கு ஊதியத்தில் ஒருநாள் ஊதிய அளவிற்கு ஒப்பந்ததாரரின் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

57. ஒப்பந்தகாரர் பாதுகாப்பு பணிக்கு நியமிக்கும் நபர்கள் எண்ணிக்கை மற்றும் பணியாளர்களின் இரண்டு புகைப்படம் அவர்களின் முழு முகவரி ஆட்குறிப்பு (Bio Data) ஆகியவற்றை நிர்வாகத்திடம் வழங்கி திருக்கோயில் நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்டவர்களை மட்டுமே பணிக்கு வைத்துக் கொள்ள வேண்டும்.

58. பாதுகாவலர் பணியில் இருக்கும் பாதுகாவலர்கள் பக்தர்களிடம் கண்ணியமான முறையில் நடந்துக் கொள்ள பயிற்சி அளிக்க வேண்டியது பாதுகாப்பு நிறுவனத்தின் முக்கியப் பொறுப்பாகும்.

59. பாதுகாப்பு பணி மேற்கொள்ளும் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு மற்றும் அரசு தொழிலாளர் நலச்சட்டங்கள் முன்னாள் இராணுவத்தினர் தொடர்பான சட்ட விதிகள் அனைத்தையும் பின்பற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் பாதுகாப்பு நிறுவனமே அனைத்துக்கும் பொறுப்பாகும்.

60. ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை பக்க வாரியாக (Page) அட்டவணையிட்டு பொருளடகத்தில் (Index) தெரிவிக்க வேண்டும்.

61. நியாயமான வேறு நிபந்தனைகள் இருந்தால் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு நேரத்தில் தெரிவிக்கப்படும்.

62. ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் நிறுவனம் குறிப்பிடும் விலைப்புள்ளி தொகைக்கு விரிவான குறிப்பு (Break – up Details) ஒன்றை இணைக்க வேண்டும்.

63. முன்னாள் இராணுவத்தினர் பங்களிப்பு மருத்துவ திட்டத்தின் கீழ் பயன்பெறும் முன்னாள் ராணுவத்தினருக்கு தொழிலாளர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகை ரொக்கமாக ஒப்பந்தப்புள்ளி பெறும் நிறுவனங்கள் வழங்க வேண்டும்.

64. திருக்கோயிலுக்கு வருகை புரியும் சேவார்த்திகளை தனிப்பட்ட முறையில் தரிசனத்திற்கு கண்டிப்பாக அழைத்துச் செல்லக் கூடாது. திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களிடம் இனாம் ஏதும் பெறக்கூடாது.

65. திருக்கோயில் மீது வழக்கு தொடர்ந்தவர்கள் ஒப்பந்தபுள்ளி கொடுக்க தகுதியற்றவர்.

66. இந்த ஒப்பந்தப்புள்ளியானது திருச்சி, மாவட்ட நீதிமன்ற ஆளுகைக்கு உட்பட்டதாகும்.

67. திருக்கோயிலில் திருவிழா நாட்கள் மற்றும் விடுமுறை விசேஷ நாட்களில் பக்தர்கள் அதிமமாக வரும் எண்பதால் பாதுகாப்பு பணியாளர்கள் சிரத்தையுன் செயல்பட வேண்டும். எந்தவொரு நிகழ்வாக இருந்தாலும் பாதுகாப்பு பணி சரியில்லையெனில் கூட்டத்தில் நெரிசல் உள்ளிட்ட விபரீதங்களை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது. பாதுகாப்பு பணியாளர் பணிக்கு இடையே சிறிய இடைவேளை என்றாலும் மாற்று ஏற்பாடு செய்துதான் செல்ல வேண்டும்.

68. பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு வாக்கி – டாக்கியினை தமது சொந்த பொறுப்பில் ஒப்பந்ததாரரால் வழங்கப்பட வேண்டும்.

69. ஒப்பந்ததாரர் ஒரு ஷிப்டில் பணிபுரிந்த பணியாளர்களை அடுத்த ஷிப்டில் பணிபுரிய அனுமதிக்க கூடாது.

70. Bio – Metric கருவி மூலம் வருகை பதிவு மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் ஷிப்ட் கணக்கிட்டு தொகை வழங்கப்படும்.

71. ஒப்பந்ததாரர்கள் ஒவ்வொரு நாளும் வேறு வேறு பாதுகாவலர்களை பணிக்கு அனுப்ப கூடாது.

72. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

திருக்கோயில் நிர்வாகம்.